கோரிக்கை எண்.		(ரூபாய் ஆயிரத்தில்).
(1)		(2)
	வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.	
61	பல்வகை மூலதனச் செலவு	32,22
	மொத்தம்—பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	5,17,26
	சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பி கொடுத்தலும்.	
62	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்	1,26,62
	பெரு மொத்தம்	31,52,38

5. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்).

<u>நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1991.</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் தீர்மானம்.

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தொடர் இன்றோடு முடிய வேண்டும் என்கின்ற எண்ணம் பெரும்பாலான உறுப்பினர் பெருமக்களுக்கும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, சட்டமுன்முடிவுகளையும் நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைப்புத் தருவீர்களானால் இன்றே ஊருக்குப் போகலாம்: அல்லது இந்தச் சட்டமுன்வடிவுகளை எவ்வளவு விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க வேண்டும் என்கின்ற நிலை இருக்குமானால் நாளைக்கும் ஒத்திப்போட வேண்டிய அவசியம் ஏற்படும்.

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விருந்தும் இறுதி விடையாற்று விருந்தாக அமைய இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மனதில் கொண்டு முழு ஒத்துழைப்பையும் தருவீர்களானால் இந்தச் சட்டமுடிவுகளையெல்லாம் நிறைவேற்ற